1982 பிப்ரவரி 16]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அமைச்சர் உணர்கிறார். உணர வேண்டியவர்கள் உணர வில்லையே என்பதுதான் இப்பொழுதுள்ள நிலைமை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளைப்பொன்னி என்கின்ற புதுரக நெல் இப்போதிருப்பதைவிட 50 சதவீதம் கூடுதல் மகசூல் கொடுக்கிறது என்றும் அதைப் போய் நோய்களே தாக்கவில்லை யென்றும் ஆனால், அதனுடைய அடிப்படை வித்துக்கள் தமிழகத்திலே விநியோகிக்கப்படவில்லை, சிங்கப்பூர் பகுதியிலே யிருந்து கடத்திக் கொண்டு திருச்சிப் பகுதியிலே போடுகிறார்கள் என்றும் பத்திரிகையிலே எழுதியிருக்கிறார்கள். ஆகவே, அந்த வெள்ளைப் பொன்னி என்ற அதிக மகசூல் கொடுக்கின்ற நெல்லை தமிழக விவசாயத் துறையில் புகுத்தி, விவசாயிகளுக்கு வழங்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இதுபற்றி தகவல் இல்லை. இருந்தாலும் பயன்படக்கூடிய நெல் ரகம் எதுவாக இருந்தாலும் அதை ஆராய்ச்சித் துறை ஏற்று, நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மூன்றில் ஒரு பங்கு நிலப்பரப்பில்தான் பாசன வசதி உள்ளது. மூன்றில் இரண்டு பகுதி வானம் பார்த்த பிரதேசம். குறைந்த தண்ணீர் வசதியோடு உற்பத்தி செய்யக்கூடிய நெல் வகைகள் ஆராய்ச்சியிலிருந்ததே, அது முழுமையாக இன்று வெற்றி அடைந்து விதைக்குத் தகுந்த அளவுக்கு வந்து விட்டதா? இந்த அரசு கவனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஓரளவுக்கு அதிலே வெற்றி கிடைத்திருக்கிறது. முகவை மாவட்டம் போன்ற பகுதிகளில் புழுதி நெல் என்ற நெல் ஓரளவு நன்றாக உற்பத்தியாகி வந்திருக்கிறது. ஆகவே, அரசு அதிலே கவனம் செலுத்துகிறது.

மருங்காபுரி தொகுதியிலுள்ள அரசு சாலைகளைப் பராமரிக்கும் பணி.

*வினா எண் 191—திரு. மே. அ. இராஜ்குமார்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருச்சி மாவட்டம் மருங்காபுரி தொகுதியில் உள்ள மிகவும் பழுதுபட்டுள்ள P.W.D. ரோடுகளை சரி செய்ய அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) இதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது?

(இ) எப்பொழுது பழுது பார்க்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) அரசுக்கு முறையீடுகள் வரவில்லை.

(ஆ மற்றும் இ) இருப்பினும் இத்தொகுதியில் உள்ள அரசு சாலைகளைப் பராமரிக்க 1980–81 ஆண்டு பராமரிப்பு நிதியில் ரூ 3,03,300 ஒதுக்கீடு செய்யப்பட்டும், பேருந்து சாலைகள் திட்டத்தின்கீழ் ஐந்து சாலைப் பணிகளுக்கு ரூ. 24.87 இலட்சம் மதிப்பீட்டிற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

சங்கனூர் பள்ளத்தின் மீது கட்டப்படும் பாலம்.

*வினா எண் 192—திரு. மா. சின்னராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோவை பெருநகரோடு இரத்தினபுரி பகுதியை இணைக்கும் சங்கனூர் பள்ளத்தின் மீது கட்டப்பட உள்ள பாலம் கட்டும் பணி எந்த நிலையில் இருக்கிறது?

(ஆ) இத்திட்டத்தை விரைவில் முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) சங்கனூர் பள்ளத்தின் குறுக்கே கட்டப்பட வேண்டிய பாலப்பணி தமிழ்நாடு மாநில கட்டுமான வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு வேலை துரிதமாக நடந்து கொண்டு வருகிறது.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மேம்பாலத்திற்காக என்ன முதலீடு செய்யப்படுகிறது. திட்டத்தினுடைய காலம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஏறத்தாழ ரூ. 4½ இலட்சம். ஓராண்டுக் காலத்தில் முடிக்கப்படும்.

திரு. மா. சின்னராசு: இதே இரத்தினபுரி பகுதியில், 1979–இல் மேட்டுப்பாளையம் நெடுஞ்சாலையை சத்தியமங்கலம் நெடுஞ்சாலையோடு இணைப்பதற்கான இணைப்புச்சாலைக்கு, அன்றைக்கு டெண்டர் கூட விடப்பட்டது. ஆனால், அந்தப் பகுதி மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட காரணத்தினால், அந்தத் திட்டத்தை மாநகராட்சிதான் ஏற்று நடத்த வேண்டுமென்று துறை முடிவு செய்ததால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. அல்லது அதை விரைவில் எடுத்து நடத்த அரசு பரிசிலனையில் இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.